# பின்னிணைப்புகள்

# பின்னிணைப்பு – 1

## கவிஞர் கண்ணதாசன் அனுபவ மொழிகள்

### *காதல்*

1) காதல் வசப்பட்டவன் ஜாதி பார்ப்பதில்லை. கடவுள் வசப்பட்டவன் மதங்களில் பிரிவு பார்ப்பதில்லை.

2) தலைவனுக்கும் தலைவிக்கும் தாய் மொழிகள் வேறு வேறு. அவனது தாய்மொழி மௌனம், அவளது தாய்மொழி மயக்கம்.

3) காதல் எல்லைகளைக் கடந்தது.

4) காதல் எந்தக் குறுக்கீட்டையும் சகிக்காது.

5) மருண்டு நோக்கும் மானின் பார்வையும், மயங்க வைக்கும் மையற்ற விழிகளும், நீண்டு தொங்கும் நிழல் போன்ற கேசமும், முழுக்க மூடிய முந்தானை மார்புந்தான் காதல் மரத்தையே பழுக்க வைக்கின்றன.

6) காதல் உணர்வினால் மனிதன் கோழையாகிறான், பைத்தியக்காரனாகிறான், உளறுகிறான், குளறுகிறான். மகாகவிகளும் மேதைகளும் ஞானிகளும் இதற்கு விதிவிலக்கில்லை.

7) காதலர்கள் உண்மையிலே ஒருவகைப் பைத்தியக்காரர்கள்! யாரிடமாவது தங்கள் காதலை உளறினால்தான் அவர்களுக்கு ஆத்மதிருப்தி!

8) நீண்டநாள் பிரிந்திருந்த காதலியை அதே அன்போடும் பாசத்தோடும் சந்திக்க நேரும்போது ஏற்படும் சுகம் என்ன என்பது, அனுபவித்தவர்களுக்கு மட்டுமே தெரியும்.

9) பிரிவில் தான் காதலின் தீவிரம் வெளிப்படும்.

10) சேர்ந்திருக்கும் காதலருக்குப் பொழுது விடியக்கூடாது என்று தோன்றுமாம்! பிரிந்திருக்கும் காதலர்கள் 'சேவல் கூடவா கூவக்கூடாது? பொழுது ஏன் விடியவில்லை?' என்று கலங்குவார்களாம்.

## வாழ்க்கை

1) முற்றி முதிர்ந்த ஞானம் வற்றாமல் இருக்க வேண்டும் என்றால் பற்றும் பாசமும் வற்றிப் போய்விட வேண்டும்.

2) 'இல்லம்' என்ற தமிழ் வார்த்தைக்கு 'எதுவும் இல்லாமல் இருக்கிறோம்' என்பதே பொருள். இல்லாம், இல்லம், இலம் இந்த மூன்று சொற்களுக்கும் ஒரே பொருள், இல்லாது வந்தோம், இல்லாமல் போகிறோம், இடையிலே சிலர் நம்மை இல்லாதவர்கள் ஆக்குகிறார்கள்.

3) இக்கட்டான நேரங்களில் பெண்ணுக்கு வருகின்ற துணிச்சல், சிங்கத்துக்குக் கூட வராது.

4) புகழ், பழி, வாழ்வு இம்மூன்றும் பெருமளவில் வந்தால் தூக்கம் வராது.

5) நிம்மதி இல்லாத மனிதன் அவசரப்பட்டு இறந்து போகாமல், ஆறப் போட்டுப் பார்த்தால் எதிர்காலத்தில் நாம் நினைத்தது எவ்வளவு முட்டாள் தனமானது என்பதை உணர முடியும்.

6) கண்ணீர் நாம் முயன்றால் நிறுத்தக்கூடிய ஒன்று தான். தனிமனிதரின் கண்ணீர் அவர்கள் மனத்தையே மையமாகக் கொண்டு ஊற்றெடுக்கிறது. ஆனால் ஒரு நாட்டின் கண்ணீர் யார் அந்த மணி மகுடத்திற்கு உரியவரோ அவராலே உருவாக்கப்படுகிறது. அவரை மக்கள் திருத்த வேண்டும் அல்லது மகேசன் திருத்த வேண்டும் அவர் திருந்திவிட்டால் மக்களின் கண்ணீர் நின்றுவிடும்.

7) மரணம் அழுகையை உற்பத்தி செய்கிறது "நாமும் ஒருநாள் இப்படித்தானே" என்ற எண்ணம் ஆறுதலைக் கொண்டு வருகிறது.

8) பெண்ணைப் பெற்றவர்கள் தான தர்மம் செய்யக் கூடாது. சொத்துக்களை அப்படியே வைத்திருந்தால் தான் பெண்களை நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுக்க முடியும்.

9) நன்றாக வாழ்ந்தால் "இவனைத் தெரியாதா? என்பார்கள். நலங் கெட்டுப் போனால், "இவனுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும் என்பார்கள்.

10) ஒருவருக்கொருவர் துணையாக இருக்க வேண்டும் என்று தான் சமுதாய வாழ்க்கையை மனிதர்கள் மேற்கொண்டார்கள், ஆனால் காட்டு மிராண்டிகளின் நாகரீகம் கூட நாட்டு மனிதர்களிடம் இல்லையே?

11) பிறவியிலேயே குற்றவாளிகள் யாருமில்லை, தவறான நடத்தையுடைய ஒருத்தியின் மகள் தர்மபத்தினியாகிவிட முடியும். கள்வனின் மகன் ஞானியாகிவிட முடியும். வளர்க்கப்படுகின்ற சூழ்நிலையே பொறுத்தே மனோபாவம் வளர்கிறது. வாட்டி எடுக்கின்ற சூழ்நிலைகளாலும் மனோபாவம் மாறிவிடுகிறது.

12) சமூகத்தில் எது கௌரவம், எது கௌரவம் இல்லை என்பதை யார் நிர்ணயிப்பது? யாரோ ஒரு சிலர் ஒரு காலத்தில் கௌரவம் என்று கருதியதை நாம் 'சம்பிரதாயம்' என்று ஏற்றுக் கொண்டிருக்கிறோம். யாரோ சிலர் கௌரவம் இல்லை என்று ஒதுக்கி வைத்ததை நாம் 'சம்பிரதாயத்துக்குப் புறம்பானது' என்று ஒதுக்கி வைத்திருக்கிறோம்.

13) புத்தியிலே மூன்று வகை உண்டு. கர்ப்பூரம், கரித்துண்டு, வாழைமட்டை என்று. கர்ப்பூரம் காட்டிய உடனேயே பற்றிக் கொள்ளும், விடிய விடிய நெருப்பைப் போட்டு ஊதினால் தான் கரித்துண்டு பற்றிக் கொள்ளும், வாழைமட்டை என்ன செய்தாலும் பற்றிக் கொள்ளாது.

14) தனது வாழ்நாளில் நேர்ந்த நிகழ்ச்சிகளை விவரித்து காந்தியடிகள் அதற்கு 'சத்திய சோதனை' என்று பெயரிட்டது எவ்வளவு பொருத்தம் தெரியுமா? தங்கமும் வைரமுமே பரிசீலிக்கப்படுகின்றன. சத்தியமே சோதிக்கப்படுகிறது.

15) சத்தியம் - அதைக் காப்பாற்றுவதற்கு எத்தனை உத்தமர்கள் செத்திருக்கிறார்கள்! அதை அவமானப் படுத்துவதற்கும் எவ்வளவு பெரிய மனிதர்கள் அவதரிக்கிறார்கள்!

16) அமெரிக்காவில் பகல் நேரம் என்றால் அப்பொழுதே இந்தியாவில் இரவு நேரம் விஞ்ஞானத்தின் படி அது நியாயம் தான், ஆனால் தமிழ் நாட்டிலேயே ஒருபக்கம் பகல், ஒருபக்கம் இரவு என்றால் எப்படி இருக்கும்? அப்படித்தான் உத்தமர்களும் அதர்மர்களும் ஒரே பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

17) "நகரத்துப் பழக்கம்" என்ற அர்த்தம் ஒன்று 'நாகரிகம்' என்ற வார்த்தைக்கு உண்டு. அதிகாரத்தைக் கொண்டு அப்பாவிகளை அவமானப்படுத்துவதும் அந்த நாகரிகத்தில் ஒன்று.

18) உடம்பு கெடும் போது தான் ஞானோதயம் பிறக்கிறதேயன்றி, அது ஆரோக்கியமாக இருக்கும் வரை மாற்றங்களே மகிழ்ச்சியைத் தருகின்றன.

19) வெளி உலகில் பெரிய மனிதனாகவும் அந்தரங்கத்தில் வேறு மாதிரியாகவும் இரட்டை வாழ்க்கை நடத்துபவர்தான் பாரத சமுதாயத்தில் அதிகம்.

20) ஆனால் என்ன தான் தோண்டித் தோண்டிப் பார்த்தாலும் கண்டுபிடிக்க முடியாத இதயம் பெண்களுக்கு மட்டுமே உண்டு.

1) 'நான் ஒன்றுமே இல்லை' என்று எவன் நினைக்கிறானோ அவனுக்குத் தான் 'ஆண்டவனைத் தவிர ஒன்றுமே இல்லை' என்ற தெளிவுவரும்.

2) உதவியின் மூலம் நண்பனையும், பதவியின் மூலம் எதிரியையும், ஆண்மையின் மூலம் மனைவியையும், திருப்தி செய்பவன் அவர்களை எப்படி வேண்டுமானாலும் ஆட்டி வைக்க முடியும்.

3) எதிர்த்துப் பேசினால் சுடச்சுட பதில் கொடுத்துவிட முடியும். புகழ்ந்து பேச ஆரம்பிப்பவனை அப்புறப்படுத்துவது கடினமான காரியம்.

4) நதி இழுத்தால் படகு ஒடுகிறது, விதி இழுத்தால் வேற்றூர் செல்கிறோம் வேறு என்ன?

5) பிறப்பைக் கொடுத்து விட்டு இறப்பை எடுத்துக் கொள்ளும் நிலை மட்டும் பூமியில் இல்லாதிருந்தால், பகவானின் இயக்கமே பொய்யாகிவிடும், உன்னை நீ உணர்ந்து கொள்ளும் போது உன்னால் உருவாக்கப்பட்ட தலைமுறைகளை நீ மறந்து விட வேண்டும். சிருஷ்டியின் நோக்கம் பரிபூரணமாக உணரப்பட்டால் தான் திருஷ்டியில் ஞானம் வரும்.

6) மரணம் வெல்ல முடியாதது என்பதை அறிந்தும், மனிதர்கள் மரணத்தை எண்ணிக் கலங்குகிறார்களே!

7) குற்றவாளிகளுக்கும், பாவிகளுக்கும் மட்டுமே தூக்கம் வராது.

8) இறந்து போனவனை சைவர்கள் “சிவபதவி” அடைந்தான் என்கிறார்கள். அந்தப் பதவி, இந்தப்பதவி என்று அலைகின்ற மனிதன் கடைசியாக அடைகின்ற பதவியே சிவபதவி. உச்சமான பதவி அது, உன்னதமான பதவி அது, எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய பதவி அது. போட்டியிடுவோர் இல்லாத பதவி அது. சீக்கிரம் கிடைக்க வேண்டும் என்று பலரும் விரும்பாத பதவி அது. நீங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் தப்ப முடியாத பதவி அது. அந்தப் பதவி தவிர்க்க முடியாதது.

9) நாற்றத்தை முகரும் போது அலங்கோலமாகி விடுகின்ற முகம், வாசனையை முகரும் போது அழகாகி விடுகிறது. நல்ல சூழ்நிலைகளே மனிதனது சுகத்துக்கு முதற்படி.

10) வாழ்க்கைக்குத் திட்டமோ வரைமுறைகளோ இல்லாமல் போனால் எந்த ஆபாசமும் நியாயமாகிவிடும். இதுதான் பாதை என்று வகுத்துக் கொள்ளாதவனுக்கு எதுவும் பாதைதான். ‘இது தான் பயணம்’ என்று முடிவு கட்டாதவனுக்கு எதுவும் பயணம் தான்.

11) தனியாக உட்கார்ந்து நன்றாக அழ விரும்புகிறவனுக்கு தனிமை நல்ல வசதி. அது உடம்பில் உள்ள நீரைக் கீழே இறக்கிவிடுகிறது. துடைப்பார் இல்லாத கண்கள் முற்றிலும் வற்றிய பிறகே கண்ணீரை நிறுத்துகின்றன.

12) உள்ளுக்குள் இருக்கும் வேதனையைச் சொல்லித்தீர்த்து விட்டால் மனத்தின் கனம் இறங்கி விடுகிறது. உடம்பின் கொதிப்பும் குறைந்து விடுகிறது. ஆனால் எல்லா உண்மைகளுக்கும் வரிவடிவம் கிடையாதோ?

13) வாழ்ந்தால் ஒரேயடியாக வாழ்ந்துவிட வேண்டும். மறந்தால் ஒரேயடியாக மறந்து விடவேண்டும். வாழ்வதும் மறப்பதுமாக இருப்பது சித்திரவதை.

14) பிரியத்திற்குரியவர்களை எல்லாம் பிரிப்பது இறைவனின் விளையாட்டு.

15) திரிந்து போன பாலுக்காகவும், கசந்து போன மனத்துக்காகவும் அழுது என்ன பயன்?

# நம்பிக்கை

1. உள்ளம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் உடல் என்ன, உலகமே நம்மை ஒன்றும் செய்ய முடியாது.

2. அழகில்லாத மனைவியானாலும் அவள் முல்லைப் பூ சூடியிருந்தால் அந்த மணத்தில் கணவனுக்கு ஆசை வருவது போல். பக்தி மார்க்கத்தில் நம்பிக்கை இல்லாதவனும் சற்று நேரம் சன்னிதானத்தில் நின்றால் சஞ்சலம் மறைந்து போகும்.

3. தோல்விகளைத் தாங்கிக் கொள்ளலாம், சகித்துக் கொள்ளலாம். ஆனால் ஒருமுறை பெற்ற அனுபவத்தையே மறுமுறையும் பெறக்கூடாது. அனுபவங்களைப் புதிது புதிதாகக் கொள்முதல் செய்யலாமே தவிர, ஒரே அனுபவத்துக்குப் புதிய ஏட்டுப் பிரதிகள் எடுக்கக் கூடாது.

4. கர்ப்ப காலத்தில், கணவனுடைய நினைவே மனைவிக்கு அதிகமாக இருக்குமானால் பிறக்கும் குழந்தை கணவனைப் போலவே இருக்கும்.

5. உணர்ச்சி பூர்வமான நம்பிக்கையால் அறிவு பிரகாசிக்கிறது. கண்கள் ஒளிமயமாகின்றன. மூடன் ஞானியாகிறான் அறிவாளிக்கு எட்டாத உண்மை எல்லாம் இவனுக்கு எட்டுகிறது.

# பக்தி

1) தானே முளைத்து, தானே தண்ணீர் குடித்து, தானே வளர்ந்து, தன்னையே வழங்கும் பனைமரம் போல தன்னலமற்றுப் பணிபுரிந்தவர்களைக் கண்ணன் காப்பாற்றுவான்.

2) கோயிலுக்குள் நுழையும்போது படியின் மீது ஏறிச் செல்ல வேண்டும். திரும்பிப் போகும் போது படியைத் தாண்டிச் செல்ல வேண்டும். காரணம் என்ன தெரியுமா? நாம் படிப்பதற்காகவே கோயிலுக்குள்ளே போகிறோம். அதனால் தான் இதைப் 'படி' என்று ஆணையிடும் வார்த்தையாகவே வைத்தார்கள். நடுவில் இருக்கும் தாமரை மலர் கல்வியின் சின்னம், திரும்பிப் போகும் போது 'படித்துக் கொண்டு விட்டோம்' என்ற மரியாதையோடு இதைத் தாண்டிப் போகிறோம்.

3) விலை மதிக்க முடியாத மாணிக்கப் பதக்கங்களை அணிந்த வேங்கடபதி விரும்பினால் அவற்றை விற்று விடாலம். அதை அவர் விற்காததற்குக் காரணம் 'அது பிறர் சொத்து' என்பதால் தான், தன்னிடம் உள்ள பிறர் சொத்தையே அவர்களுக்காகப் பாதுகாக்கிறான். தலைவன், பிறர் சொத்துக்களில் ஆசை வைக்காதே என்பது அதன் பொருள், யாருடைய வாழ்க்கைக்கும் குறுக்கே நிற்காதவனுக்கே நல்ல வாழ்க்கையை ஸ்ரீரங்கன் அருளுகிறான்.

4) தாயே, புதிய வாழ்க்கையைக் கண்டு ஆணவம் அடைந்து விடாமலும், பழைய வாழ்க்கையை மறந்து போய் விடாமலும் இருக்க, எனக்கு அருள் புரி.

5) பக்தி நிலை, காதல் நிலை இரண்டு தான் மெய் மறந்த நிலைகள், முற்றி முதிர்ந்த பக்தி நிலைக்கு காதல் நிலையின் சாயல் உண்டு. அது உடல் வழிக்காமம் அன்று, மனவழி உணர்வே.

## மனம்

1) சொல்லி விட்டுச் சிந்திக்கிறவன் மனிதன், சிந்தித்துச் சொல்கிறவன் ஞானி.

2) மனத்தை வென்றவன் மரணத்தைக் கண்டு பயப்படமாட்டான், வரவு வரும் போது குதிக்க மாட்டான், செலவு வரும் போது திகைக்க மாட்டான். எந்தக் காலத்தில் எது நடக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறானோ அவன் வாழ்வில் அது நடக்கும்.

3) வஞ்சகம் என்ற நஞ்சு நெஞ்சிலே நுழைந்து விட்டால் அவர்கள் பாம்பைக் கூடக் கடித்தே கொன்று விடுவார்கள்.

4) மனோபாவத்தில் தோன்றுகின்ற விகாரந்தன் விரசமே தவிர, ஒரு பெண்ணைப் பல கோணங்களில் ரசிப்பது விரசமானதல்ல, அது வருணித்ததை ராமனே கண்டிக்க வேண்டியிருக்குமே!

5) ஒரு சுவையில் மனம் ஊறிவிட்டால் எங்கிருந்து வேண்டுமானாலும் குதிக்கச் சொல்லுகிறது.

# அரசியல்

1) அதிகாரம் மக்களுக்கே என்று இருப்பவன் தக்கவர் கூடும் இடத்தில் தலைகுனிந்து நிற்பான், கோழைத்தனத்தால் அல்ல அடக்கத்தினால்!

2) நெல்லைத் தூற்றும் போது பதர்கள் எல்லாம் ஒரு பக்கம் குவியும் மணிகளெல்லாம் ஒரு பக்கம் குவியும், மணியை விட அதிக விலைக்குப் பதர்களை விற்கத் தெரிந்தவன் அரசியல்வாதி.

3) விட்டுக் கொடுப்பது ஒருவகை அரசியல் தர்மம் ஏன் - கட்டிப்போடுவதும் காட்டுக்குத் துரத்துவதும் கூட அரசியலில் நியாயமாகத் தான் இருந்திருக்கின்றன.

4) சூழ்ச்சியால் பதவி பெற்றவன் அதைக் கண்ணீரோடு ஒருநாள் இழக்க வேண்டியிருக்கும், ஆட்சியைத் தவறாக அடைந்தவன் வீழ்ச்சிக்கும் தயாராக இருக்க வேண்டும்.

5) அரசியலில் முன்னேற்ற விரும்புகிறவன் தன்னுடன் பணி செய்வோர் மீது கோபம் வந்தால் உடனேயே காட்டிக் கொள்ளக் கூடாது. காத்திருந்து கழுத்தறுக்க வேண்டும் என்பது ராஜதந்திரம்.

6) மக்களுக்காகத் தலைவர்கள் என்பது ஜனநாயகத்தின் அடிப்படை. ஆனால் தலைவர்களின் வாழ்வுக்காக மக்கள் என்று ஆகிவிட்டது ஜனநாயகத்தின் நடைமுறை.

7) எதையும் அழகாகவும், ஆணித்தரமாகவும் சொல்லத் தெரிந்து விட்டால் அது உண்மையோ, பொய்யோ அவனைச் சுற்றிலும் ஒரு பெரும் கூட்டம் கூடிவிடும்.

8) ஒரு கட்சியிலே இருந்து, இன்னொரு கட்சி பிரியும் போது, பிரிந்து வந்தவர்கள் முன் னாலே இருந்த கட்சியை ஏசாமல், அதைப் புகழ்ந்து புகழ்ந்து அழிப்பது என்கிற கெட்டிக்காரத்தனத்தை அண்ணாவிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

9) அரசியலில் மணி மண்டபத்திலிருந்து அடுப்பாங்கரை வரை நான் பார்த்திருக்கிறேன்.

10) அரசியல் என்பது அயோக்கியனின் கடைசிப் புகலிடம் என்பதாக ஒரு புதுமொழியை நான் நீண்ட காலமாகவே கேட்டு வந்திருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரை அது அயோக்கியனின் முதல் புகலிடமாகவே இருந்து வந்திருக்கிறது என்பது என்னால் காண முடிந்தது.

# பின்னிணைப்பு - 2

## கவிஞர் கண்ணதாசனின் செப்புமொழிகள்

1) கழுதையையும் குதிரையையும் ஒரே மாதிரி படைத்திருக்கிறான் இறைவன். இதிலிருந்து, அவன் முன் கூட்டியே ஜனநாயகத்தைப் பற்றிச் சிந்தித்திருக்கிறான் என்பது தெரிய வருகிறது.

2) கண்களை மூடிக்கொள்ளுங்கள், காதுகளை அடைத்துக் கொள்ளுங்கள், இதயத்தை மூடி வைத்து விடுங்கள், செய்து விட்டீர்களா! சபாஷ்! நீங்கள் அரசியல்வாதி ஆகிவிட்டீர்கள்.

3) தகுதி இல்லாதவன் புகழ் பெறக் கூடிய துறைகள் இரண்டே! ஒன்று அரசியல் இன்னொன்று, சினிமா!

4) நளன் காப்பாற்றிய பாம்பு நளனையே கடித்தது. பரமசிவன் கழுத்திலுள்ள பாம்பு அவரை எப்போது கடிக்கப் போகிறதோ!

5) 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்பது ஏசுநாதர் வாக்கு. 'கொடுங்கள் வாங்கப்படும், ஆளுங்கள் ஆதரிக்கப்படும்' என்பது பெரியார் வாக்கு!

6) அடுத்தவன் பணத்துக்கு ஆசைப்படாதே, அது சுலபமாகக் கிடைத்தாலொழிய!

7) நான் ஒரு நாள் சாகத்தான் போகிறேன், அப்போது எல்லோரும் அழத்தான் போகிறீர்கள், அப்போது அழுவதை இப்போதே அழுங்களேன், என் கண்ணாலேயே பார்க்கிறேன்! போதும் போதும், அழுகையை நிறுத்துங்கள். இந்தப் பாவிகளுக்கு அழக்கூடத் தெரியவில்லையே, இவர்களை நம்பி எப்படிச் சாவது?

8) பன்றியைச் சந்தனத்தில் குளிப்பாட்டினால் அது, அதையும் சேறு என்று தான் நினைத்துக் கொள்ளும், பண்பாடில்லாதவனைப் பதவியில் கொண்டு வந்து வைத்தால், பழைய வாசனை போய்விடுமா...?

9) வாய்வுக்கோளாறு உள்ளவனுக்கு நெஞ்சிலே எரிச்சல் வரும்; உஷ்ணக் கோளாறு உள்ளவனுக்குக் கண்கள் பொங்கும்; சீதக்கோளாறு உள்ளவனுக்கு ஜன்னி காணும், பித்தக்கோளாறும், அதனால் புத்திக் கோளாறும் உள்ளவன் ஜனநாயகத்தில் நாணயத்தை நம்புவான்!

10) துன்பம் இருக்கிறதோ இல்லையோ ஒவ்வொரு நாளும் தனியாக உட்கார்ந்து கொஞ்சநேரம் பழைய பாவங்கள் எதையாவது நினைத்து அழுது பாருங்கள், ஈரத்தைப் பிழிந்த வேட்டி போல் மனம் கனமில்லாமல் இருக்கும்.

11) கேட்கும் போது சிரிப்பு வரவேண்டும், சிந்தித்துப் பார்த்தால் அழுகை வர வேண்டும், அது தான் நல்ல நகைச்சுவை.

12) எந்தக் குற்றமும் மன்னிக்கக் கூடியது தான், ஆனால் மன்னிக்க முடியாத குற்றம் ஒன்று உண்டு, அதுதான் அயோக்கியர்களுக்கு ஓட்டுப் போடுவது.

13) காந்திஜி ஒரு ராமராஜ்யத்தைக் கனவு கண்டார். இன்று ஏராளமான மனிதர்கள் அந்த ராமராஜ்யத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். குரங்குகள் இல்லாமல் ராமராஜ்யம் ஏது?

14) சம்பாதிக்காத மனைவி சம்பாதிக்கும் கணவனை மிரட்டுவதற்குப் பெயர் குடும்பம். புத்தியில்லாத மந்திரி, புத்தியுள்ள மந்திரியை மிரட்டுவதற்குப் பெயர் ஜனநாயகம்!

15) சருமம் பளபளப்பாக இருந்தால் உடம்பிலே நோய் இல்லையென்று பொருளல்ல; தட்டிக் கொடுப்பவர்களெல்லாம் அன்புள்ளவர்கள் என்றும் பொருளல்ல.

16) கடிகாரம் மணியைக் காட்டுகிறது. காலண்டர் தேதியைக் காட்டுகிறது. தேர்தல் ஜாதியைக் காட்டுகிறது!

17) தராசின் எந்தத் தட்டு மேலே ஏறினாலும், அளவை சரியில்லை, வரவு அதிகமானாலும் செலவு அதிகமானாலும் மனிதனுக்கு நிம்மதி இல்லை.

18) செப்புமொழி என்று இதை ஏன் கூறுகிறீர்கள் என்று ஒரு நபர் கேட்கிறார். இது 'பொன்மொழி அல்ல வெல்லும் 'செப்பு' தான், பொன்னிலே கலவை உண்டு, செம்பிலே கலவை இல்லை'.

# பின்னிணைப்பு – 3

## கவிஞர் கண்ணதாசனின் வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| பிறப்பு | - | 24-6-1927, சிறுகூடல்பட்டி |
| பெற்றோர் | - | சாத்தப்பன் - விசாலாட்சி |
| இயற்பெயர் | - | முத்தையா |
| உடன்பிறந்தோர் | - | எண்மர் |
| கல்வி | - | ஆரம்பக்கல்வி - சிறுகூடல்பட்டி, அமராவதிபுதூரில் எட்டாம் வகுப்புவரை |
| தொழில் தேடிச் செல்லல் | - | 1943-இல் கிராமத்தை விட்டுத் தொழில் தேடி திருச்சி செல்லல்; அங்கிருந்து சென்னைக்குப் பயணம். |
| முதற்பணி | - | திருவொற்றியூர் அஜாக்ஸ் கம்பெனி |
| பத்திரிக்கை வேலை | - | 1944 - இல் 'திருமகள்' பத்திரிக்கையில் வேலைக்குச் சேருதல். |
| முதற்கவிதை | - | 1944 - இல் 'காலை குளித்தெழுந்து' என்ற முதல் கவிதை |
| கவிதைத் தொகுதிகள் | - | முதற் தொகுதி 1957<br>இரண்டாம் தொகுதி 1958<br>மூன்றாம் தொகுதி 1968<br>நான்காம் தொகுதி 1971<br>ஐந்தாம் தொகுதி 1972<br>ஆறாம் தொகுதி 1976<br>ஏழாம் தொகுதி 1982 |
| இதழ்கள் | | 1944 - இல் 'திருமகள்' ஆசிரியர்<br>1945-46 - இல் 'திரைஒலி', 'மேதாவி' ஆசிரியர்<br>1949 'சண்டாருகம்' ஆசிரியர். (மாதமிருமுறை)<br>1954 'தென்றல் கிழமை', 'தென்றல் திரை'<br>1956 'முல்லை' இலக்கிய மாத இதழ் |

| | | |
|---|---|---|
| திரைப்படத்துறை | - | 1949 திரைப்படத்துறைப் பயிற்சி |
| முதற் பாடல் | - | 1949 'கன்னியின் காதலி' யில் 'கலங்காதிரு மனமே' என்ற பாடல. |
| முதல் வசனம் | - | 1951 'இரத்தினதீபம்' வங்க மொழியிலிருந்து தமிழ் டப்பிங். |
| | | 1952-53 இல் சிறையில் இருந்த போது எழுதிய 'இல்லறஜோதி'. |
| திரைப்படத் தயாரிப்பு | - | 1958-59 'மாலையிட்ட மங்கை', 'சிவகங்கைச் சீமை', 'கவலை இல்லாத மனிதன்', 'வானம்பாடி', 'இரத்தத்திலகம்', 'கறுப்புப்பணம்'. |
| திருமணம் | - | 1950 |
| மூன்று மனைவியர் | - | பொன்னழகி, பார்வதி, வள்ளியம்மை. |
| அரசியல் | - | 1949 தி.மு.கழகம் - ஆரம்பகால உறுப்பினர். |
| முதற் காவியம் | - | 1952-53 இல் டால்மியாபுரம் பெயர் மாற்றம் போராட்டத்தில் ஈடுபட்டு தண்டனைக்குள்ளாகி சிறையில் இருந்தபோது எழுதப்பட்ட 'மாங்கனி'. |
| தேர்தலில் போட்டி | - | 1957 - இல் இரண்டாவது பொதுத் தேர்தலில் திருக்கோட்டியூர் தொகுதியில் தி.மு.கழகத்தின் சார்பில் போட்டியிட்டு தோல்வி. |
| அரசியல் மாற்றம் | - | 1960-61 தி.மு.கழகத்திலிருந்து விலகுதல். |
| புதிய கட்சி | - | 'தமிழ்த் தேசியக் கட்சி', சம்பத் தலைமையில் துவக்கம். |
| | | 1963 - இல் காங்கிரஸில் இணைப்பு. |
| | | 1964-65 அகில இந்திய காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர். |
| மீண்டும் இதழ்கள் | - | 1968-69 'கண்ணதாசன் மாத இதழ்', 'கடிதம் நாளிதழ்'. |
| உருசியப் பயணம் | - | 1970 சிறந்த பாடலாசிரியர் விருது |
| | | மத்திய மாநில அரசுகள். |
| மலேசியா | - | 1971, 1975 இருமுறை |
| அரசவைக் கவிஞர் | - | 1978 |

| | | |
|---|---|---|
| சாகித்திய அகாடமி பரிசு | - | 1979 'சேரமான் காதலி' |
| அண்ணாமலை அரசர் நினைவுப் பரிசு | - | 1979 சிறந்த கவிஞர் |
| பொன்விழா | - | 1977, '50 ஆண்டு நிறைவு' |
| அமெரிக்கப் பயணம் | - | 1-7-81, டெட்ராய்ட் நகர் தமிழ்ச் சங்க விழா. |

*இறுதி நாட்கள்:*

உடல் நலமின்மை காரணமாக 24-7-81 சிகாகோ நகர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 17-10-81 சனிக்கிழமை அமரரானார்.

20-10-81 அமெரிக்காவிலிருந்து பொன்னுடல் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, இலட்சக்கணக்கான மக்களின் இறுதி அஞ்சலிக்குப் பிறகு அரசு மரியாதையுடன் 22-10-81-இல் எரியூட்டப்பெற்றது.

*புனை பெயர்கள்:*

காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, கமகப்ரியா, பார்வதிநாதன்.

*குழந்தைகள்:*

ஒன்பது ஆண் மக்கள், ஐந்து பெண் மக்கள்.

*தனிச் சிறப்பு:*

கவிதைகள், கதைகள், காவியங்கள், கட்டுரைகள், நாடகங்கள், சுயசரிதம் என்பனவாக எண்ணற்ற நூல்களை எழுதியுள்ளார். 6,000க்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை இயற்றியுள்ளார்.

# பின்னிணைப்பு - 4

## கண்ணதாசனின் படைப்புகள்

### அ) கவிதைகள்

1. ஆட்டனத்தி ஆதிமந்தி
2. ஆனந்த ரகசியம் (பஜகோவிந்தம் பாடல்கள்)
3. இயேசு காவியம்
4. கண்ணதாசன் கவிதைகள் - தொகுதி ஒன்று
5. கண்ணதாசன் கவிதைகள் - தொகுதி இரண்டு
6. கண்ணதாசன் கவிதைகள் - தொகுதி மூன்று
7. கண்ணதாசன் கவிதைகள் - தொகுதி நான்கு
8. கண்ணதாசன் கவிதைகள் - தொகுதி ஐந்து
9. கண்ணதாசன் கவிதைகள் - தொகுதி ஆறு
10. கண்ணதாசன் கவிதைகள் - தொகுதி ஏழு
11. கவிதாஞ்சலி
12. கிழக்கும் மேற்கும் ஏந்திய தலைவன்
13. திரை இசைப் பாடல்கள் - தொகுதி ஒன்று
14. திரை இசைப் பாடல்கள் - தொகுதி இரண்டு
15. திரை இசைப் பாடல்கள் - தொகுதி மூன்று
16. தைப்பாவை
17. பாடிக்கொடுத்த மங்கலங்கள்
18. மாங்கனி
19. முற்றுப் பெறாத காவியங்கள்
20. ஸ்ரீ கிருஷ்ண அந்தாதி, ஸ்ரீ கிருஷ்ண கானம்
21. ஸ்ரீ கிருஷ்ண கவசம்

### ஆ) கட்டுரை நூல்கள்

22. அந்தி சந்தி அர்த்தஜாமம்
23. இலக்கியத்தில் காதல்

24. எண்ணங்கள் 1000
25. கட்டுரைகள்
26. கடைசிப் பக்கம்
27. கண்ணதாசன் கதம்பம்
28. சந்தித்தேன் சிந்தித்தேன்
29. சிருஷ்டி ரகசியம்
30. சினிமா சந்தையில் 30 ஆண்டுகள்
31. ஞானமாலிகா
32. தலையங்கங்கள்
33. தெய்வதரிசனம்
34. தோட்டத்துப் பூக்கள்
35. நம்பிக்கை மலர்கள்
36. நான் பார்த்த அரசியல்
37. நான் ரசித்த வர்ணனைகள்
38. புஷ்பமாலிகா
39. பேனா நாட்டியம்
40. போய்வருகிறேன்
41. ராகமாலிகா
42. வாழ்க்கை எனும் சாலையிலே

## இ) சமூக நாவல்கள்

43. அதைவிட ரகசியம்
44. அரங்கமும் அந்தரங்கமும்
45. அவள் ஒரு இந்துப்பெண்
46. அவளுக்காக ஒரு பாடல்
47. ஆச்சி
48. ஆயிரங்கால் மண்டபம்
49. சரகுவின் சௌந்தர்ய லஹரி
50. சிங்காரி பார்த்த சென்னை

51. சிவப்புக்கல் மூக்குத்தி
52. சுருதி சேராத ராகங்கள்
53. தேன்மொழியாள் பகீரதன்
54. நடந்த கதை
55. பிருந்தாவனம்
56. மனதுக்குத் தூக்கமில்லை
57. மனம்போல் வாழ்வு
58. மிஸா
59. முப்பது நாளும் பௌர்ணமி
60. ரத்த புஷ்பங்கள்
61. விளக்கு மட்டுமா சிவப்பு
62. வேலங்குடித் திருவிழா

### ஈ) வரலாற்று நாவல்கள்

63. ஆயிரம் தீவு அங்கயற் கன்னி
64. ஊமையன் கோட்டை
65. கடல்கொண்ட தென்னாடு
66. சேரமான் காதலி (சாகித்திய அகாதமி பரிசு பெற்றது)
67. பாரிமலைக்கொடி
68. ராஜமோகினி

### உ) கதைகள்

69. ஒரு கவிஞனின் கதை
70. ஒரு நதியின் கதை
71. ஒரு பெண்ணின் கதை
72. கண்ணதாசன் கதைகள்
73. குட்டிக் கதைகள்
74. செய்திக் கதைகள்

## ஊ) நாடக நூல்கள்

75. அனார்கலி
76. சிவகங்கைச்சீமை
77. சீவகன் காதல்
78. தெய்வத் திருமணங்கள்
79. பகைவனின் காதலி
80. புவனமுழுதுடையாள்
81. ராஜதண்டனை

## எ) சிந்தனைச் சிதறல்கள்

82. அர்த்தமுள்ள இந்துமதம், கேள்வி - பதில்
83. அனுபவ மொழிகள்
84. இலக்கிய யுத்தங்கள்
85. கேள்விகளும் கண்ணதாசன் பதில்களும்
86. செப்பு மொழிகள் - 250

## ஏ) வாழ்வியல் நூல்கள்

87. ஆடவர் மங்கையர் அங்க இலக்கணம்
(சாமுத்ரிகா லஷ்ணத்திற்கு உரை)
88. குடும்ப சுகம்
89. குடும்ப சூத்திரம்

## ஐ) வாழ்க்கை வரலாற்று நூல்கள்

90. எனது சுயசரிதம்
91. எனது வசந்த காலங்கள்
92. வனவாசம்
93. மனவாசம்

## ஒ) சமய நூல்கள்

94. அம்பிகை அழகு தரிசனம் (ஆதிசங்கரரின் செளந்தர்யலஹரி)
95. அர்த்தமுள்ள இந்துமதம் - முதல் தொகுதி
96. அர்த்தமுள்ள இந்துமதம் - இரண்டாம் தொகுதி

97. அர்த்தமுள்ள இந்துமதம் - மூன்றாம் தொகுதி
98. அர்த்தமுள்ள இந்துமதம் - நான்காம் தொகுதி
99. அர்த்தமுள்ள இந்துமதம் - ஐந்தாம் தொகுதி
100. அர்த்தமுள்ள இந்துமதம் - ஆறாம் தொகுதி
101. அர்த்தமுள்ள இந்துமதம் - ஏழாம் தொகுதி
102. அர்த்தமுள்ள இந்துமதம் - எட்டாம் தொகுதி
103. அர்த்தமுள்ள இந்துமதம் - ஒன்பதாம் தொகுதி
104. அர்த்தமுள்ள இந்துமதம் - பத்தாம் தொகுதி
105. பொன்மழை

## ஓ) உரை நூல்கள்

106. அபிராமி அந்தாதி
107. கூளப்ப நாயக்கன் காதல்
108. திருக்குறள் காமத்துப்பால்
109. பகவத்கீதை
110. மூவேந்தர் காதலியர் (முத்தொள்ளாயிரம்)
111. ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை

## ஔ) தொகுப்பு நூல்கள்

112. சங்கர பொக்கிஷம்
113. தென்றல் வெண்பா 1000

# பின்னிணைப்பு - 5

## கண்ணதாசனின் கவிதைத் தொகுதிகளிலுள்ள மனிதநேயக் கவிதைகள்

| வ. எண் | தொகுதி | கவிதைத் தொகுப்பு | பக்க எண் | பாடல் எண் |
|---|---|---|---|---|
| 1) | 1-2 | உழவு | 9 | 1 |
| 2) | 1-2 | சருகானாள் | 25 | 7 |
| 3) | 1-2 | ஏன் | 30 | 8 |
| 4) | 1-2 | கலையாவாணன் | 55 | 15 |
| 5) | 1-2 | அருவி ஓய்ந்தது | 58 | 16 |
| 6) | 1-2 | அம்பேத்கார் | 65 | 17 |
| 7) | 1-2 | வள்ளல் அழகப்பா | 66 | 18 |
| 8) | 1-2 | ஆறாது ஆறாது | 70 | 19 |
| 9) | 1-2 | டாக்டர் நாயுடு | 76 | 20 |
| 10) | 1-2 | விடுதலை வீரன் நாகி | 78 | 21 |
| 11) | 1-2 | கே.வி.கே.சாமி | 84 | 22 |
| 12) | 1-2 | பொழிந்த மேகம் | 87 | 23 |
| 13) | 1-2 | பட்டுக்கோட்டை | 89 | 24 |
| 14) | 1-2 | கண்ணீர் | 93 | 25 |
| 15) | 1-2 | எண்ணம் | 95 | 26 |
| 16) | 1-2 | தமிழா தமிழா | 96 | 27 |
| 17) | 1-2 | வாழ்க | 113 | 28 |
| 18) | 1-2 | அடிமை விலங்கறுப்பீர் | 122 | 31 |
| 19) | 1-2 | விடுதலை விளைத்த உரிமை | 126 | 33 |
| 20) | 1-2 | பூத்தது புதுமை | 131 | 34 |
| 21) | 1-2 | கழக மாகாவியம் | 143 | 40 |
| 22) | 1-2 | பெரும்பயணம் (காவியம்) | 155 | 42 |
| 23) | 1-2 | கல்லக்குடி மகாகாவியம் | 209 | 43 |
| 24) | 1-2 | எதிரொலி | 225 | 44 |

| | | | | |
|---|---|---|---|---|
| 25) | 1-2 | கொண்டு வந்தாரே | 228 | 45 |
| 26) | 1-2 | இலங்கையில் வாழும் | 231 | 46 |
| 27) | 1-2 | இலங்கைத் தமிழரும் | 249 | 51 |
| 28) | 1-2 | முதுகுளத்தோர் கலகம் | 251 | 52 |
| 29) | 1-2 | கொலை -தற்கொலை | 253 | 53 |
| 30) | 1-2 | இன்னுமா தமிழா? | 256 | 54 |
| 31) | 1-2 | ஒற்றுமை வளர்ப்போம் | 258 | 55 |
| 32) | 1-2 | நாசர் பாடம் | 260 | 56 |
| 33) | 1-2 | திபேத்தில் சதியுடைமை | 262 | 57 |
| 34) | 1-2 | அழுகல்வரி | 264 | 58 |
| 35) | 1-2 | சுற்றுப்பயணம் | 266 | 59 |
| 36) | 1-2 | புதிய தமிழ்நாடு | 267 | 60 |
| 37) | 1-2 | நமது குடும்பம் | 271 | 63 |
| 38) | 1-2 | எட்டுத் திசையிலும் நாம் | 281 | 65 |
| 39) | 1-2 | வருக வாழ்க | 284 | 66 |
| 40) | 1-2 | தலைவனல்ல தத்துவம் | 291 | 69 |
| 41) | 1-2 | பாரதியைக் கண்டேன் | 301 | 72 |
| 42) | 1-2 | பாரதியும் பாரதிதாசனும் | 304 | 73 |
| 43) | 1-2 | நான் தெய்வத்தை நம்புகிறேன் | 308 | 74 |
| 44) | 1-2 | வாரீர் வாரீர் | 310 | 75 |
| 45) | 3 | வாழ்க | 15 | 1 |
| 46) | 3 | வாழ்க நன்று | 17 | 2 |
| 47) | 3 | நின்னுயிரும் பல்லுயிரும் | 18 | 3 |
| 48) | 3 | நடுங்கும் வயது நடுங்காத கொள்கை | 21 | 4 |
| 49) | 3 | அறுபதா, இருபத்தொன்னா | 23 | 5 |
| 50) | 3 | கண்ணியன் பிறந்த நாள் | 25 | 6 |
| 51) | 3 | சேதுத்தமிழ்ப்பிள்ளை | 28 | 8 |
| 52) | 3 | நல்லவர் வாழ்க | 30 | 9 |
| 53) | 3 | தேவரனையர் | 34 | 11 |

| | | | | |
|---|---|---|---|---|
| 54) | 3 | அரிய தலைவனே வருக | 41 | 13 |
| 55) | 3 | மன்றமே மணியே | 44 | 14 |
| 56) | 3 | அவனே பாரதம் | 47 | 15 |
| 57) | 3 | அன்புக்கு மரணம் இல்லை | 49 | 16 |
| 58) | 3 | ரோஜா மலரே! | 52 | 17 |
| 59) | 3 | கரைந்து விட்டான் | 53 | 18 |
| 60) | 3 | வரம் வேண்டும் | 54 | 19 |
| 61) | 3 | கமலப்பூவே! | 55 | 20 |
| 62) | 3 | நேரு காவியம் | 57 | 21 |
| 63) | 3 | நேரு மீண்டும் பிறந்தாள் | 60 | 22 |
| 64) | 3 | நேரு நினைவு நாள் | 66 | 23 |
| 65) | 3 | ஆத்மாவே துணை | 72 | 24 |
| 66) | 3 | மறையாஒலி | 74 | 26 |
| 67) | 3 | கவிஞன் கண்ட கவிஞன் | 77 | 26 |
| 68) | 3 | வானம் நிலவு | 79 | 27 |
| 69) | 3 | வெற்றி முரசு | 82 | 28 |
| 70) | 3 | ஜனநாயக சோஷலிசம் | 106 | 32 |
| 71) | 3 | தேசம் ஒன்று தேசியம் ஒன்று | 116 | 33 |
| 72) | 3 | மறுமலர்ச்சி | 119 | 34 |
| 73) | 3 | மேடும் பள்ளமும் | 124 | 35 |
| 74) | 3 | நட்புறவு | 136 | 37 |
| 75) | 3 | எண்ணம் | 165 | 42 |
| 76) | 3 | எழுகவே | 167 | 43 |
| 77) | 3 | சுதந்திரம் என்ன? | 169 | 44 |
| 78) | 3 | காமராசர் தாலாட்டு | 173 | 45 |
| 79) | 3 | அண்ணா நாற்பது | 179 | 46 |
| 80) | 3 | நமக்கொரு திருநாள் | 181 | 47 |
| 81) | 3 | உறுதி | 184 | 48 |

| | | | | |
|---|---|---|---|---|
| 82) | 3 | சபதம் | 191 | 50 |
| 83) | 3 | எங்கே பகைவன் | 194 | 51 |
| 84) | 3 | எரியும் நெஞ்சின்குரல் | 196 | 52 |
| 85) | 3 | சூ-என்-லாய் ராக்-அன்-ரோல் | 198 | 53 |
| 86) | 3 | சீனத்துக்கு நன்றி | 200 | 54 |
| 87) | 3 | அவன்தான் இறைவன் | 205 | 55 |
| 88) | 3 | எங்கே அவன்? | 208 | 56 |
| 89) | 3 | மனிதன் தோற்றம் | 210 | 57 |
| 90) | 3 | இறைவனும் மனிதனும் | 212 | 58 |
| 91) | 3 | நீமணி;நான்ஒலி | 217 | 59 |
| 92) | 3 | அன்னைக்கு விண்ணப்பம் | 223 | 61 |
| 93) | 3 | சிந்தனையும் செயலும் | 228 | 63 |
| 94) | 3 | வெற்றி தோல்வி | 230 | 64 |
| 95) | 3 | விடுதலை | 234 | 66 |
| 96) | 3 | மனிதரில் இறைவன் | 240 | 69 |
| 97) | 3 | கவிஞனுக்கு அஞ்சலி | 242 | 70 |
| 98) | 3 | குயில் பாடிய குயில் | 244 | 71 |
| 99) | 3 | ஈடாக ஒருவரில்லை | 246 | 72 |
| 100) | 3 | பல்லாண்டு | 247 | 73 |
| 101) | 3 | ஒப்பில்லா மணியே | 249 | 74 |
| 102) | 3 | ஜீவானந்தமே | 252 | 75 |
| 103) | 3 | காவலர் கண்ணீர் | 255 | 77 |
| 104) | 3 | காலத்தின் கோலமே | 257 | 78 |
| 105) | 3 | என்னை அழவிடு | 259 | 79 |
| 106) | 3 | ஒன்றே சிந்தனை | 273 | 82 |
| 107) | 3 | வருங்கால தமிழகம் | 275 | 83 |
| 108) | 3 | நாடெனில் சோவியத் | 277 | 84 |
| 109) | 3 | மங்கலம் பேசுக | 279 | 85 |
| 110) | 4 | ஜனனம் | 31 | 4 |

| | | | | |
|---|---|---|---|---|
| 111) | 4 | ஜனனம் | 31 | 4 |
| 112) | 4 | நட்பு | 33 | 5 |
| 113) | 4 | ஒரு கந்தல் துணியின் கதை | 43 | 8 |
| 114) | 4 | ஒரு பானையின் கதை | 47 | 9 |
| 115) | 4 | நெருப்பின் மக்களே | 49 | 10 |
| 116) | 4 | கூட்டுப் பண்ணை | 53 | 11 |
| 117) | 4 | ரத்தக் கால்வாய் | 55 | 12 |
| 118) | 4 | அவிவேக சிந்தாமணி | 61 | 14 |
| 119) | 4 | நட்பு | 85 | 15 |
| 120) | 4 | தலைவர்கள் | 86 | 16 |
| 121) | 4 | தேர்ந்தெடு | 87 | 17 |
| 122) | 4 | முன்னேறு | 88 | 18 |
| 123) | 4 | துணிக | 89 | 19 |
| 124) | 4 | இனமேது? | 95 | 23 |
| 125) . | 4 | அனுபவம் - 1 | 96 | 24 |
| 126) | 4 | அனுபவம் - 2 | 97 | 25 |
| 127) | 4 | செவத்தம்மா | 99 | 26 |
| 128) | 4 | ஒஹோ ஹோ வேறா மனிதர்களே | 103 | 27 |
| 129) | 4 | வியட்நாமில் அமெரிக்கக் கொலைகாரர்கள் | 111 | 28 |
| 130) | 4 | என்னருமை சீசர் | 119 | 30 |
| 131) | 4 | நல்வழி | 124 | 31 |
| 132) | 4 | வங்கதேசமே | 154 | 37 |
| 133) | 5 | மனிதரைப் பாடமாட்டேன் | 11 | 1 |
| 134) | 5 | கலியுகம் முடியும் நேரம் | 18 | 3 |
| 135) | 5 | திருக்கோயில் கட்டவைப்பேன் | 22 | 4 |
| 136) | 5 | என்ன விதியோ? | 35 | 7 |
| 137) | 5 | தனிவழிப்பயணம் | 36 | 8 |
| 138) | 5 | சில ஐயங்கள் | 39 | 9 |

| | | | | |
|---|---|---|---|---|
| 139) | 5 | இறைவனை எழுப்புங்கள் | 43 | 10 |
| 140) | 5 | இன்று நீ, நாளை நீ, என்றும் நீ என்றிரு | 48 | 11 |
| 141) | 5 | காலக்கணிதம் | 53 | 13 |
| 142) | 5 | சிலந்தி வலை | 55 | 14 |
| 143) | 5 | கண்ணா அருள்வாய் | 57 | 15 |
| 144) | 5 | நினைக்க தெரிந்த மனமே | 59 | 15 |
| 145) | 5 | பாவ மன்னிப்பு | 63 | 17 |
| 146) | 5 | ஒரு கனவு | 65 | 18 |
| 147) | 5 | ஒரு பரந்தாமன் | 78 | 22 |
| 148) | 5 | அவனைத் தூங்கவிடுங்கள் | 82 | 23 |
| 149) | 5 | எனது பாரத தேசமே | 89 | 25 |
| 150) | 5 | அள்ளித்தா | 92 | 26 |
| 151) | 5 | ரோஜா இனிமேல் | 95 | 27 |
| 152) | 5 | மெய்யும் பொய்யும் | 98 | 28 |
| 153) | 5 | பாரதப் பூச்செண்டு | 101 | 29 |
| 154) | 5 | கருணை மகன் | 103 | 30 |
| 155) | 5 | நாடு பகைவர்க்கோ | 109 | 31 |
| 156) | 5 | எழுக பாரதம் | 115 | 32 |
| 157) | 5 | கைவிட்டாரே! | 117 | 33 |
| 158) | 5 | பினாங்கு கண்டேன் | 127 | 34 |
| 159) | 5 | கிள்ளான் | 128 | 35 |
| 160) | 5 | முருகா! | 129 | 36 |
| 161) | 5 | வேலன் | 130 | 37 |
| 162) | 5 | மலையாண்டி | 131 | 38 |
| 163) | 5 | தெண்டாயுதபாணி | 133 | 39 |
| 164) | 5 | கொண்டாடு கொண்டாடு | 135 | 40 |
| 165) | 5 | மலைநாடு - ஒருவீடு | 137 | 41 |

| | | | | |
|---|---|---|---|---|
| 166) | 5 | அழகிய சிங்கபுரம் | 138 | 42 |
| 167) | 5 | கீதமே வேதம் | 145 | 44 |
| 168) | 5 | அன்னை விசாலாட்சி | 152 | 45 |
| 169) | 5 | சொன்னபடி தூங்கிவிட்டான் | 187 | 49 |
| 170) | 5 | பொதுமை காண்போம் | 191 | 50 |
| 171) | 5 | கவி எழுதித் தொலைப்பதென்ன | 193 | 51 |
| 172) | 5 | அவர்களை வாழவிடுங்கள் | 200 | 51 |
| 173) | 5 | வாழிய மனையறம் | 203. | 54 |
| 174) | 5 | மாநில சுயாட்சி | 210 | 57 |
| 175) | 6 | நல்லறம் பாடுகிறேன் | 11 | 1 |
| 176) | 6 | புத்தாண்டு விண்ணப்பம் | 16 | 3 |
| 177) | 6 | புதிய தைப்பாவை | 17 | 4 |
| 178) | 6 | உன்னை நான் காணுகிறேன் | 21 | 5 |
| 179) | 6 | வரலாமா ரகுராமா | 23 | 6 |
| 180) | 6 | கட்டளை மறந்தீரோ | 25 | 7 |
| 181) | 6 | துணிந்து சொல்வீர் | 32 | 9 |
| 182) | 6 | வாழ்வெலாம் நிம்மதி | 37 | 11 |
| 183) | 6 | கேட்கிறேன் சொல்லுங்கள் | 39 | 12 |
| 184) | 6 | கடவுளை நம்பினால் | 43 | 14 |
| 185) | 6 | கி.பி. 2000 | 45 | 15 |
| 186) | 6 | நெஞ்சோடு புலம்பல் | 48 | 16 |
| 187) | 6 | புத்தி இது மகளே | 52 | 17 |
| 188) | 6 | கண்ணா என் பிரபு! | 55 | 18 |
| 189) | 6 | கேள்வனே கண்ணபிரானே | 59 | 19 |
| 190) | 6 | புதியன பிறக்கட்டும் | 62 | 20 |
| 191) | 6 | சொந்தம் ஒன்று வேண்டும் | 65 | 21 |
| 192) | 6 | இந்திய ஜனநாயகம் | 68 | 22 |
| 193) | 6 | ஜனநாயகத்துக்கு அனுதாபம் | 71 | 23 |

| | | | | |
|---|---|---|---|---|
| 194) | 6 | இறைவன் கொடுத்த அன்பு | 74 | 24 |
| 195) | 6 | பாடுவது நானல்ல | 77 | 25 |
| 196) | 6 | கனவில் பதிலுரைப்பாய் | 80 | 26 |
| 197) | 6 | காலமகள் கோலம் | 84 | 27 |
| 198) | 6 | தன்னை மறந்தலயம் | 92 | 28 |
| 199) | 6 | ஓர் இரவு | 94 | 29 |
| 200) | 6 | இடி புயல் மழையாய் | 123 | 37 |
| 201) | 6 | பாருங்கசாமி -இது பாரத பூமி | 125 | 38 |
| 202) | 6 | கோரிக்கை | 128 | 39 |
| 203) | 6 | வன்முறையே நன்முறையா | 133 | 40 |
| 204) | 6 | நெஞ்சில் இட்ட நெருப்பு | 135 | 41 |
| 205) | 6 | இந்திய வானம் | 141 | 42 |
| 206) | 6 | வெள்ளிவிழாச் சபதம் | 143 | 43 |
| 207) | 6 | பெயர் தெரியாத தியாகிகள் | 145 | 44 |
| 208) | 6 | சுதந்திரத் திருநாள் | 155 | 45 |
| 209) | 6 | இன்றைய பாரதமாதா | 158 | 46 |
| 210) | 6 | அன்னையின் வழியில் | 161 | 47 |
| 211) | 6 | மாதராண்டு | 162 | 48 |
| 212) | 6 | விக்ராந்த் | 165 | 49 |
| 213) | 6 | கண்ணன் என்னை | 190 | 52 |
| 214) | 6 | நாத்திகக் கருவறுப் போம் | 227 | 59 |
| 215) | 6 | நாத்திகர்க்கோர் புத்திமதி | 230 | 60 |
| 216) | 6 | பூமழை பொழிவதாக | 241 | 66 |
| 217) | 6 | வாழ்க | 248 | 67 |
| 218) | 6 | சாவிலா வீட்டில் | 251 | 68 |
| 219) | 6 | தேசத்தை ஈர்த்த தமிழன் | 273 | 72 |
| 220) | 6 | ஒரு சரித்திரம் | 277 | 73 |
| 221) | 6 | பேரும் புகழும் பெறுவாழ்வு! | 278 | 74 |
| 222) | 7 | மானிடமும் ஈஸ்வரமும் | 23 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 223) | 7 | தேராமானிடம் தேருவதெவ்விடம் | 26 | 2 |
| 224) | 7 | மீண்டும் பிறந்தாய் | 28 | 3 |
| 225) | 7 | குத்துவிளக்குப் பாடுகிறது | 31 | 4 |
| 226) | 7 | வேண்டும் வேண்டும் | 35 | 5 |
| 227) | 7 | தலைவனைத்தேடி | 38 | 6 |
| 228) | 7 | வாய்ப்பு | 41 | 7 |
| 229) | 7 | கார்காலத் துவக்கத்தில் | 43 | 8 |
| 230) | 7 | சுயதரிசனம் | 45 | 9 |
| 231) | 7 | சாரமிருக்குதம்மா | 50 | 11 |
| 232) | 7 | தவக்கோலம் | 54 | 13 |
| 233) | 7 | நீதிக் கேட்கிறேன் | 60 | 15 |
| 234) | 7 | ஆணவம் அழிய | 63 | 16 |
| 235) | 7 | காரணங்கள் காரணங்கள் | 69 | 18 |
| 236) | 7 | விநாயகர் | 75 | 19 |
| 237) | 7 | இதயமே தந்தவேளே | 76 | 20 |
| 238) | 7 | பாடுங்கள் நாடுங்கள் | 78 | 21 |
| 239) | 7 | வணிகர் குலத்து | 81 | 22 |
| 240) | 7 | கிட்டாதன கிட்டும் | 83 | 23 |
| 241) | 7 | கண்ணன் என் தெய்வம் | 87 | 24 |
| 242) | 7 | திருமலையின் தனியரசன் | 94 | 25 |
| 243) | 7 | மனு | 99 | 27 |
| 244) | 7 | ஸ்ரீ கிருஷ்ண பாமாலை | 103 | 28 |
| 245) | 7 | ஸ்ரீ கிருஷ்ணகாந்தன் பாமாலை | 107 | 29 |
| 246) | 7 | சக்தி | 117 | 30 |
| 247) | 7 | கற்பகாம்பிகை | 118 | 31 |
| 248) | 7 | சிங்காரத் தென்மதுரை அங்கயற்கண்ணி | 120 | 32 |
| 249) | 7 | திருச்சானூர்த் திருக்கோலம் | 123 | 33 |
| 250) | 7 | மாங்காடு ஸ்ரீ காமாட்சி மகிமை | 125 | 34 |

| | | | | |
|---|---|---|---|---|
| 251) | 7 | மூகாம்பிகை | 129 | 35 |
| 252) | 7 | மலையரசி நீ சாட்சி | 130 | 36 |
| 253) | 7 | தேவியே | 134 | 37 |
| 254) | 7 | பண்ணாரி மாரியம்மன் | 136 | 38 |
| 255) | 7 | மழைமொழி மாரியம்மா | 140 | 39 |
| 256) | 7 | காவேரி போற்றி | 142 | 40 |
| 257) | 7 | பாமாலை | 144 | 41 |
| 258) | 7 | மாதா | 149 | 42 |
| 259) | 7 | தேசத்தை ஒன்றாய் வைப்போம் | 153 | 43 |
| 260) | 7 | ஏற்றுங்கள் போற்றுங்கள் | 155 | 44 |
| 261) | 7 | சுதந்திரச் சிறகுகள் | 159 | 46 |
| 262) | 7 | மூன்று சகாப்தங்கள் | 162 | 47 |
| 263) | 7 | சுதந்திரத்தை தேடுகிறோன் | 164 | 48 |
| 264) | 7 | சாத்தானுக்கு விண்ணப்பம் | 167 | 49 |
| 265) | 7 | காந்தி நீ பிறக்க வேண்டும் | 170 | 50 |
| 266) | 7 | நேர்மை பிறந்தநாள் | 173 | 51 |
| 267) | 7 | சரித்திர நதியில் | 176 | 52 |
| 268) | 7 | ராஜா இல்லாத ரோஜாக்கள் | 179 | 53 |
| 269) | 7 | நேருவின் நினைவே | 182 | 54 |
| 270) | 7 | தரம் மிக்க கதைகள் யாத்தார் | 184 | 55 |
| 271) | 7 | சரத் சந்திரர் | 185 | 56 |
| 272) | 7 | பாரதி | 187 | 57 |
| 273) | 7 | மரணத்தை வென்ற மகாகவி | 191 | 58 |
| 274) | 7 | காலத்தால் நிலைத்த கவி | 193 | 59 |
| 275) | 7 | பாட்டாளியின் முதற்குரல் | 195 | 60 |
| 276) | 7 | அவனோ அற்புதராகம் | 197 | 61 |
| 277) | 7 | நினைவு | 199 | 62 |
| 278) | 7 | புகழ்க்கோ | 200 | 63 |

| | | | | |
|---|---|---|---|---|
| 279) | 7 | தேவர் பெருமானே திரும்பி வரமாட்டிரா | 203 | 65 |
| 280) | 7 | மரபு காப்போம் | 209 | 67 |
| 281) | 7 | பொலிக புதியன | 210 | 68 |
| 282) | 7 | வருவன போவன | 212 | 69 |
| 283) | 7 | பொலிக மாதோ | 214 | 70 |
| 284) | 7 | புதியன பொலிவதாக | 215 | 71 |
| 285) | 7 | நல்ல கொள்கைக்கு நன்றி | 217 | 72 |
| 286) | 7 | வாழ்வாங்கு வாழ்ந்த குலமே | 219 | 73 |
| 287) | 7 | ஏக்கம் | 224 | 74 |
| 288) | 7 | ஞானக்கண் | 227 | 75 |
| 289) | 7 | கனலைத் தடுக்க | 229 | 76 |
| 290) | 7 | சமயம் | 233 | 79 |
| 291) | 7 | கடவுளுக்கு நன்றி | 236 | 80 |
| 292) | 7 | புதியதோர் உலகுசெய்வோம் | 239 | 81 |
| 293) | 7 | தமிழோடிருப்பவர்கள் | 244 | 82 |
| 294) | 7 | கானம் அறிவோம் | 255 | 83 |
| 295) | 7 | கறை இலா அரசு | 260 | 84 |
| 296) | 7 | ஆதி மூலம் எது அம்மா | 265 | 85 |
| 297) | 7 | எனது நாடு | 268 | 86 |
| 298) | 7 | பாப்பாவுக்கு மாமா | 271 | 87 |
| 299) | 7 | குழந்தை வளர்ப்பு 1 | 273 | 88 |
| 300) | 7 | குழந்தை வளர்ப்பு 2 | 275 | 89 |
| 301) | 7 | புகையும் பகையும் | 277 | 90 |
| 302) | 7 | மது 1 | 279 | 91 |
| 303) | 7 | மது 2 | 281 | 92 |
| 304) | 7 | முன்னேற | 283 | 93 |
| 305) | 7 | கண்ணன் பெயரைச் சொல்ல | 289 | 96 |
| 306) | 7 | சீலமாதவா | 291 | 97 |
| 307) | 7 | மலைநாட்டில் | 294 | 98 |

| | | | | |
|---|---|---|---|---|
| 308) | 7 | சர்வோதயம் | 296 | 99 |
| 309) | 7 | தமிழன் 1 | 298 | 100 |
| 310) | 7 | தமிழன் 2 | 300 | 101 |
| 311) | 7 | தமிழன் 3 | 302 | 102 |
| 312) | 7 | இரவுகள் | 325 | 112 |
| 313) | 7 | மனைவி | 327 | 113 |
| 314) | 7 | போட்டியில்லா மந்திரி | 330 | 114 |
| 315) | 7 | திருமண மந்திரம் | 333 | 115 |
| 316) | 7 | ஒரு இளைஞனின் இதய குமுறல் | 335 | 116 |
| 317) | 7 | காதலுக்கோர் கல்லறை | 340 | 119 |
| 318) | 7 | அவள் சமூகம் முன்னேறிவிட்டது | 343 | 120 |
| 319) | 7 | சிரிக்க - சிந்திக்க | 349 | 122 |
| 320) | 7 | மீண்டும் எம்முடன் | 357 | 124 |


894.811
PS
2.